பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி2 4 வியாழக்கிழமை 10.10.2024 கதிர் 337

இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி இன்று யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில்வேட்புமனுக்களைத் தாக்கல் செய்கிறது. மற்றைய இடங்களில் இன்னமும் ☞2

## இலங்கையின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும்

# ஐ.நா. தீர்மானம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பு

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதைஇலக்காகக்கொண்டஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51/1 தீர்மானம் நேற்று மேலும் ஒரு வருட காலத்தால்நீடிக்கப்பட்டது.காலநீடிப்புக்கான புதிய தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு இலங்கை ஆளும்தரப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் வாக்கெடுப்பின்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய தீர்மானம், 2022 நிறைவேற்றப்பட்ட 51/1தீர்மானத்தின்மூலம்ஐ.நா.உயர்ஆணையர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட ஆணையை மேலும்ஒருவருடத்திற்குநீட்டித்திருக்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயற்படுவதற்கான தனது உறுதிப்பாட்டைவெளிப்படுத்தியஅதேவேளை, இந்தத் தீர்மானத்தை முழுமையாக நிராகரிப்பதாக இலங்கை தெரிவித்தது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான பொறிமுறையை நிறுவ ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்திற்கு அதிகாரம் வழங்கும் தீர்மானம் 51/1 மற்றும் அதற்கு இரண்டாண்டுகளுக்கு முந்தைய 46/1 ☞2

## மின்சார சட்டத்தில் மீண்டும் திருத்தம்

மின்சாரச் சட்டத்தில் திருத்தம் செய்ய திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

சட்டத்தில் தேவையான மாற்றங்களை அடையாளம் காண்பதற்கான மீளாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக மின்சாரத் துறை ☞8

## அமெ. கடற்படை அட்மிரல் இலங்கைக்கு வருகிறார்

அமெரிக்ககடற்படைஅட்மிரல்மற்றும் அமெரிக்கபசிபிக்கடற்படையின்தளபதி,4 நட்சத்திர தரத்திலான அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர், இன்றையதினம்இலங்கைக்கு வரவுள்ளார்.

நீடித்த, நெகிழ்ச்சியான, சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் அமைப்பிற்காகஅமெரிக்காவிற்கும்இலங்கைக்கும் இடையிலான கூட்டாண்மையை மையப்படுத்தியதாக இந்த வருகை அமையவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

2021ஆம் ஆண்டுக்குப் பின்னர் உயர்ந்தஅமெரிக்கஇராணுவவிஜயத்தை குறிக்கும் வகையில் அமையும் அட்மிரல் கோஹ்லர் இலங்கை விஜயத்தின் போது அவர் இலங்கையின் மூத்த அதிகாரிகளுடன் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில்அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்கள், கடல்சார்விழிப்புணர்வுமற்றும் பேரிடர் பதிலளிப்பு ஆகியவற்றில் ☞8



## பொருளாதார மறுசீரமைப்பு ஜனாதிபதியின் கீழ் கடினம்

### ஹர்ஷ டி சில்வா கருத்து

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் கீழ் பொருளாதார வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது கடினமானதாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ☞2

## தமிழ் தேசிய கட்சிகளே சுயநலத்துடன் நடந்தன

### கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

தமிழ் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள்கூட தங்களின் சுய இலாபத்திற்காக ஒற்றுமையாக செயல்பட்டு பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் தாங்கள் சுயநலத்திற்காக தங்களது கட்சி பிரபல்யம் அடைய வேண்டும் என்பதற்காக வடக்கு கிழக்கில் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் நடந்து கொண்டுள்ளார்கள் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் குற்றம் சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று அங்கீகரிக்கப்பட்ட இரண்டு அரசியல் கட்சிகள் தமது நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன.ரெலோ செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் தலைமையில் ☞8

## ஞானசாரருக்கு எதிராக பிடியாணை பிறப்பிப்பு

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண. கலபொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகத் தவறிய காரணத்தினால் அவர் பதவி விலகியுள்ளார்.

இந்த நிலையில், 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 கொம்பைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அருகில் முஸ்லிம் சமூகத்தின் மத நம்பிக்கைகளை இழிவுபடுத்தும் வகையில் ஞானசாரதேரர்வெறுப்புணர்வை வெளிப்படுத்தியதாக ☞8

## நுவரெலியா தபாலக கட்டம் தாபல் திணைக்களத்திற்கே

### அமைச்சர் விஜித ஹேரத் உறுதிமொழி

நுவரெலியா தபாலகம் மற்றும் காணி என்பன தபால் திணைக்களத்தின்செயற்பாடுகளுக்கு அன்றி வேறு எந்தவொரு நடவடிக்கைக்கும் வழங்கப்பட மாட்டாதென அமைச்சர் ☞8

## பொறுப்புக்கூறலுக்கான ஐ.நா. ஆணையை விரிவாக்குங்கள்

### உலகத் தமிழர் பேரவை கோரிக்கை

இலங்கை குறித்த பொறுப்புக்கூறல் திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஆணையை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை விரிவாக்கவேண்டும் என்று உலகதமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

மனித உரிமைகள் ஆணையர் இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் மற்றும் ஜெனிவா மனித உரிமைகள் சபையின் 57ஆவது அமர்வில் நடைபெற்ற உரையாடல் ☞2

## 4 நாட்டுத் தூதர்கள் நேற்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

வியட்நாம், தாய்லாந்து, சுவிஸ், ஜேர்மன் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் நேற்று ஜனாதிபதி அநுரகுமாரவைச் சந்திதுப் பேசினர்.

இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டிரின் திடெம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு தனதும், வியட்நாம் அரசதலைவர் மற்றும் அரசாங்கத்தினதும் வாழ்த்துக்களைத் தெரிவித்த தூதுவர், இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பைமேம்படுத்திமுன்னோக்கிச்செல்வதற்கு தனது சாதகமான கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் வர்த்தகத் துறையில் வியட்நாம் அடைந்துள்ள வெற்றிகள் குறித்து இங்கு அவதானம் செலுத்தப்பட்டதுடன், இலங்கையில் அந்த துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு வியட்நாமின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கைக்கும் ☞8

## நாட்டின் வருமானத்தை அதிகரிக்க அதிகாரிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு

இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளை அரசுத்தலைவர் நேற்று நேரில் சந்தித்துப் பேசினார். அரசின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பாக இந்தச் சந்திப்பில் முக்கியமான ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பின் போது இரு திணைக்கள அதிகாரிகளும் வருமானத்தை நிர்வகித்தல் மற்றும் வரி ஏய்ப்பைக் கையாள்வதில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன என்பதை முன்வைத்தனர் என்று அரசுத் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந்த இரு திணைக்களங்களினதும் சிறந்த ஒத்துழைப்பு, வரிச் சட்டங்களை மேலும் வலுவாக அமல்படுத்துவதை உறுதிசெய்வுடன்,வரிஇழப்பைத் தடுப்பதுடன் நாட்டின் வருவாய் சேகரிப்பை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்று அரசுத் ☞8

## மாவையின் பதவி விலகல் கடிதம் கிடைக்கவேயில்லை

### தமிழ் அரசுக் கட்சி செயலர் தெரிவிப்பு

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அல்லது கட்சியிலிருந்து விலகினார்கள் என்று கூறப்படும் எவரது பதவி விலகல் கடிதங்களும் இதுவரைதனக்கு ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வேட்பாளர்கள் பெயர்கள் நேற்றிரவு வரை இறுதிசெய்யப்படவில்லை. இன்று காலைக்குள் அந்தப் பணிகள் பூர்த்தியானால் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும். இல்லையேல் நாளையே வேட்புமனு தாக்கல் செய்யப்படும்.

வன்னி மாவட்ட வேட்பாளர்களை நியமிப்பதில் அந்த மாவட்ட ஆயர் இல்லத்தின் தவறான தலையீடு காரணமாக இழுபறி நீடிக்கின்றது என்று தெரிகிறது. வீட்டுச் சின்னத்தின் கீழ் மன்னார் மாவட்டத்திலிருந்து கிறிஸ்தவர்கள் எவரும் போட்டியிடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு ஆயர் இல்லம் செயற்படுவதான குற்றச்சாட்டு உண்டு. தமிழ் அரசுக் கட்சியின் கீழ் போட்டியிட முன்வந்த கிறிஸ்தவ வேட்பாளர்களை உடன் விலகுமாறு ஆயர் இல்லம் தொடர்புகொண்டு கூறியதாகவும் தகவல்கள் உண்டு. இதனால் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட இணங்கி வந்த வேட்பாளர்கள் பலர் கடைசி நேரத்தில் பின்வாங்கிக் கொண்டனர். இதுவே வன்னி வேட்பாளர் தெரிவு தாமதப்படுவதற்குக் காரணம். தமிழ் அரசுக் கட்சி மன்னார் மாவட்டத்தில் இருந்து இருவரை அல்லது மூவரைக் களமிறக்குவதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் 4 வேட்பாளர்களும் இறுதிசெய்யப்பட்டுவிட்டனர். மற்றைய கட்சிகளின் சார்பில் 3 வேட்பாளர்கள் நியமிக்கப்படவேண்டும். அவற்றில் இரு கட்சிகளுக்கு வேட்பாளர்களைப் பெற முடியாத காரணத்தால் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கே தமது கட்சியின் மூலம் இடம் வழங்கியிருக்கின்றன. ரெலோ தமிழ் அரசுக் கட்சியின் இளம் சட்டத்தரணி ஒருவருக்கும் ஈபிஆர்எல்எவ் மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி என்பன இணைந்து தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ஒருவருக்கும் போட்டியிட வாய்ப்பு வழங்கியுள்ளன. இதனால் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளையினருக்கு ஏற்பட்டுள்ள குழப்பம் இன்று காலையில் தீர்க்கப்பட்டால் அங்கும் இன்றே வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி தனித்தே தனது 10 வேட்பாளர்களையும் நிறுத்தியுள்ளது. அங்கு எந்தக் குழப்பமும் இன்றி வேட்பாளர் தெரிவு முடிந்துள்ளது.

இதற்கிடையில் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்காதவர்கள் ஒன்றிணைந்து சுயேச்சையாகப் போட்டியிடுவது தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன என்று இரண்டு நாட்களுக்கு முன்பே வாசகர்களுடன் தகவலைப் பகிர்ந்துகொண்டிருந்தேன். சுயேச்சைக் குழுவில் போட்டியிட ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சம்மதம் தெரிவித்ததை அடுத்து அந்த அணியினரும் இன்று அனேகமாக வேட்புமனுத் தாக்கல் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அணியினர் தம்மை ஜனநாயக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் என்று அழைத்துக்கொள்வார்களாம். தேர்தலுக்குப்பின்னரும் அவர்கள் இப்படியொரு புதிய கட்சியாகத் தம்மைப் பதிவு செய்து இயங்குவார்கள் என்றும் சொல்லப்படுகின்றது. பார்க்கலாம். இந்த அணியில் தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், அவரது அணியைச் சேர்ந்தவரான வலி. மேற்கு பிரதேச சபை முன்னாள் தலைவர் நாகரஞ்சினி, கரவெட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவரான வர்த்தகர் ஐங்கரன், புலம்பெயர் தமிழ் முதலாளியான அகிலன் முத்துக்குமாரசாமி, ஊர்காவற்றுறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் நாவலன் ஆகியோரும் அடங்குகின்றனர். இவர்களுடன் தமிழ் அரசுக் கட்சியில் வாய்ப்பு நிராகரிக்கப்பட்ட மகளிர் அணியைச் சேர்ந்த சிலருக்கும் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்று சொல்லப்படுகின்றது. அத்தோடு அனந்தி சசிதரனையும் இந்த அணிக்குள் உள்வாங்க பேச்சு நடத்தப்படுகின்றது. பேரங்கள் படிந்தால் இந்த அணியினர் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்வர்.

இந்த அணியினர் சிறீதரனையும் தங்களோடு இணைத்துக்கொள்ள முயற்சி செய்தனர். அவரோடு பேச்சு நடத்தினர். தமிழ் அரசுக் கட்சியை விட்டுவிட்டுத் தம்மோடு வந்து சேருமாறு கோரினர். ஆனால் சிறீதரன் மறுத்துவிட்டார். தான் கடைசிவரை தமிழ் அரசுக் கட்சியிலேயே இருப்பேன் என்று தெரிவித்துவிட்டார். கட்சிக்குள் என்ன நடந்தாலும் கட்சியைவிட்டு வெளியேறும் எண்ணம் தனக்கு இல்லை என்று தெரிவித்திருக்கிறார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஐ.நா ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இரு தீர்மானங்களையுமே நிராகரிப்பதாக ஜெனீவாவில் உள்ள இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

“A/HRC/57/G/1 ஆவணத்தில் உள்ள இந்தகவுன்சிலுக்கானஎங்கள்விரிவானபதிலில் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளகாரணங்களுக்காக, உயர் ஆணையரின் அறிக்கையிலிருந்தும் நாங்கள் விலகினோம். 51/1 தீர்மானம் சம்பந்தப்பட்ட நாடு என இலங்கையின் அனுமதியின்றி முன்வைக்கப்பட்டு, பிளவுபட்ட வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, இந்த தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்ட ஆணைகளை நீட்டிக்கும் எந்தவொரு அடுத்தடுத்த முடிவும் சபையில் ஒருமித்த கருத்தை கொண்டிருக்கவில்லை,” என்று இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இலங்கையின் மறுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தலுக்கான மாதிரி நடத்தையைப் பின்பற்றி, நமது பலதசாப்தகால ஜனநாயக நடைமுறைக்கு ஏற்ப இலங்கையில் கண்ணியமான ஆட்சி மாற்றம் ஏற்பட்டது, இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க செப்டம்பர் 23 பதவியேற்றார்.

அடுத்த மாதம், இலங்கை மக்கள் புதிய நாடாளுமன்றத்தை தெரிவு செய்யவுள்ளார்கள், இதன் மூலம் நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்திற்கான மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சட்டத்தின் ஆட்சி, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவை நாட்டு மக்கள் அனைவரினதும் நீடித்த பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நல்வாழ்வுக்காக உறுதி செய்யப்படும்.

மக்களின் விருப்புக்களுக்கு இணங்க, ஆளும்தரப்பு நேர்மை மற்றும் நெறிமுறை நிர்வாகத்திற்கு முன்னுரிமை அளிக்கும், இதில் பொருளாதார சரிவின் மூல காரணமான தவறான மேலாண்மை மற்றும் ஊழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

கடந்த கால பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது உட்பட அனைத்து குடிமக்களின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை ஆளும்தரப்புப் பாதுகாக்கும். நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் நீதி ஆகியவற்றைக் கையாளும் உள்நாட்டு பொறிமுறைகள் மற்றும் செயல்முறைகள் அரசமைப்பு கட்டமைப்பிற்குள் நம்பகமானதாகவும் சுயாதீனமாகவும் இருக்கும், மேலும் மக்களின் நம்பிக்கையைக் கொண்ட ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க செயல்முறை செயல்படுத்தப்படும். எமது ஜனாதிபதி கூறியது போல், ''உள்நாட்டு பொறிமுறைகளை நம்பகத்தன்மையுடனும், உறுதியானதாகவும் மாற்றுவதே எங்கள் நோக்கம்...”

ஜனாதிபதி, புலனாய்வு அதிகாரிகள் ஏற்கனவே நிலுவையில் உள்ள தெளிவாக அடையாளம் காணப்பட்ட பல பொறுப்புக்கூறல் வழக்குகள் மீதான விசாரணையை இரட்டிப்பாக்குவதாக அறிவித்துள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும்.

எமது அரசமைப்பு மற்றும் உடன்படிக்கை உறுதிப்பாடுகளுக்கு இணங்க பாரபட்சமின்றி அனைவருக்கும் சமமான உரிமை மற்றும் பன்முகத்தன்மையை மதிக்கும் இலங்கையை உருவாக்க ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த நோக்கத்திற்காக நிர்வாக, அரசியல் மற்றும் தேர்தல் செயல்முறைகள் செயல்படுத்தப்படும்.

இப்போது நம் முன் இருக்கும் வரைவுத் தீர்மானம் குறித்து:

தீர்மானவரைவு 57/L.1 மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானம் 51/1 இல் உள்ள கட்டளைகளை நீட்டிக்கிறது.

தீர்மானம் 51/1 மற்றும் அதற்கு முந்தைய தீர்மானம் 46/1 ஆகியவற்றை இலங்கை எதிர்த்துள்ளது, இதன் கீழ் ஐ.நா. மனித உரிமைள் ஆணையாளர் அலுவலகம் வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் பொறிமுறையை நிறுவுவதற்கு இலங்கை தனது எதிர்ப்பை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ள காரணங்களை முன்வைத்து ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையரின் அறிக்கையிலிருந்தும் நாங்கள் விலகுகின்றோம்.

சம்பந்தப்பட்ட நாடு என்ற வகையில் இலங்கையின் அனுமதியின்றி முன்வைக்கப்பட்டு, பிளவுபட்ட வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதே 51/1 தீர்மானம். இந்தத் தீர்மானத்தால் நிறுவப்பட்ட ஆணைகளை நீட்டிக்கும் எந்தவொரு அடுத்தடுத்த முடிவும் சபையில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

இந்தச்சபைக்கு நாங்கள் மீண்டும் மீண்டும் நினைவூட்ட விரும்புவது இந்த வெளிப்புறச் சான்று சேகரிக்கும் பொறிமுறையை அமைப்பது என்பது முன்னோடியில்லாதது. மற்றும் தற்காலிக விரிவாக்கமாகும், மேலும் இந்தத் தீர்மானம் ஐ.நா.வின் கொள்கைகளான பாரபட்சமற்ற தன்மை, புறநிலை மற்றும் தேர்ந்தெடுக்காத தன்மைக்கு முரணானது.

எந்தவொரு இறையாண்மையுள்ள அரசும் அதன் அரசமைப்பிற்கு முரணாக இயங்கும் மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயல்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புற பொறிமுறையின் உருவாக்கத்தையும் செயற்பாட்டையும் ஏற்க முடியாது. மேலும், இந்த பொறிமுறையின் வரவு-செலவுத் தாக்கங்கள் குறித்து பல நாடுகள் ஏற்கனவே தீவிர கவலைகளை எழுப்பியுள்ளன.

மேற்கூறிய காரணங்களுக்காக, 51/1 தீர்மானத்தின் ஆணையை நீட்டிக்கக் கோரி இன்று இச்சபையில் முன்வைக்கப்பட்டுள்ள வரைவுத் தீர்மானத்தை நிராகரிக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டது.

# பாப்பரசர் வாழ்த்து

இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி வணக்கத்திற்குரிய பிரையன் உதைக்வே ஆண்டகை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த வத்திக்கான் பிரதிநிதி, கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும் இறைமைமிக்க வத்திக்கான் அரசின் பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் அவர்களின் உளப்பூர்வமான வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதிக்கு கையளித்தார்.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையின் கீழ் இலங்கை வெற்றிமிக்க மற்றும் சுபீட்சத்தை நோக்கிப் பயணிக்கும் எனத் தெரிவித்த வத்திக்கான் பிரதிநிதி உதைக்வே ஆண்டகை, அதற்காக தாம் மனமார வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் எதிர்காலம் குறித்து தனது சாதகமான கருத்தை வெளிப்படுத்திய உதைக்வே ஆண்டகை, மக்கள் எதிர்பார்க்கும் வகையில் நாட்டில் ஏற்கனவே சிறப்பான அபிவிருத்திகள் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார். அது தொடர்பான ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டிய அவர், அந்த முயற்சிகள் அனைத்திற்கும் வத்திக்கான் ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்ட மிகவும் மோசமான அனுபவமான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து தனது வருத்தத்தை தெரிவித்த உதைக்வே ஆண்டகை, அது தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடனும் நம்பகத்தன்மையுடனும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முயற்சியையும் பாராட்டினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதி மற்றும் நியாயத்தை வழங்குவதற்காக ஜனாதிபதியின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு வத்திக்கானின் முழு ஆதரவையும் வழங்குவதாக உதைக்வே ஆண்டகை உறுதியளித்தார். இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர உறவுகள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கை நாடு மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்காக இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதியும் வத்திக்கான் பிரதிநிதி உடன்பாடு தெரிவித்தனர்.

## மாவையின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை என்று கட்சியின் செயலாளர் மருத்துவர சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் விடயங்களை கையாள்வதற்கான நியமனக்குழு வவுனியாவில் நேற்றுக் கூடியது. இதன் பின்னர் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னி தேர்தல் மாவட்டத்தின் வேட்பாளர் பட்டியல் இறுதிசெய்யப்பட்டுள்ளது. நாளை காலை பெயர்ப்பட்டியல் அறிவிக்கப்படும்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் பதவி விலகல் கடிதம் எதுவும் இதுவரை எனக்கு கிடைக்கவில்லை.

அதுபோலவே சசிகலா மற்றும் தவராசா ஆகியோர் கட்சியில் இருந்து வெளியேறினர் என்று ஊடகங்கள் வாயிலாகவே அறியமுடிகின்றது. அவர்களது கட்சி விலகல் கடிதமும் இதுவரை கிடைக்கவில்லை.

கடிதம் அனுப்பபட்டுள்ளதாக பத்திரிகைகள் ஊடாகவே சொல்லப்படுகின்றது. எனவே இது தொடர்பாக நான் கருத்துக்கூற முடியாது அவ்வாறான நிலமை ஏற்ப்படுமாக இருந்தால் கட்சியின் யாப்பின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் இதுவரை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல்களில் மாற்றம் செய்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. கட்சியின் மத்திய குழுவே தேர்தல் நியமனக்குழுவை நியமித்தது. அந்த குழுவானது எவ்வாறான அடிப்படையில் வேட்பாளர்களை தெரியவேண்டும் என்று தீர்மானம் எடுத்ததோ அந்த அடிப்படையில் நியமனங்களை வழங்கியிருக்கிறது.

இம்முறை தேர்தலில் புதியவர்கள் அனைத்து மாவட்டத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளனர். விண்ணப்பித்த அனைவருக்கும் கொடுக்கமுடியாத துர்பாக்கிய நிலமை எமக்கு உள்ளது.

அத்துடன் இம்முறை தேர்தலில் கொழும்பில் போட்டி இடுவது தொடர்பாகவும் மத்திய குழுவில் கதைக்கப்பட்டது. தற்போதைய களநிலவரங்களின் அடிப்படையில் அங்குள்ள ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக ஆராய்ந்துள்ளோம். அந்த அடிப்படையில் கொழும்பில் இம்முறை தமிழ் அரசுக் கட்சி போட்டியிடாது என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வேறு ஒரு கட்சியூடாக தேர்தலில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து முற்றாக வெளியேறாமல் இருக்கும் பட்சத்தில் கட்சியின் யாப்பிற்கமைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## பொருளாதார ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று வேட்புமனுவில் கையெழுத்திட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை மக்களிடம் பொறுப்பினை ஒப்படைக்கின்றேன். நாடாளுமன்றத்துக்கு ஹர்ஷவை அனுப்புவதா இல்லையா என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும். நான் நாட்டுக்கும் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் இன்னும் எஞ்சியுள்ளன. எனவே இம்முறையும் நாடாளுமன்றத்துக்கு மக்கள் என்னை அனுப்புவார்கள் என்று நம்புகின்றேன்.

ஆளுங்கட்சியிலிருந்தாலும் எதிர்க்கட்சியிலிருந்தாலும் பொருளாதாரம் தொடர்பில் அதிகமாகக் கதைத்திருக்கின்றேன் என்பதை மக்கள் அறிவார்கள். பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட முன்னரும் கூட என்ன நடக்கும் என்பதை நான் தெரிவித்திருந்தேன். தற்போதைய ஜனாதிபதியின் கீழ் பொருளாதார வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது கடினமானதாகும்.

நாடாளுமன்றத்தில் இவை தொடர்பில் விவாதிப்பதற்கு என்னைப் போன்றவர்கள் இருக்க வேண்டும் என்று மக்கள்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதல்கள் விசாரணை ஆரம்பம் ; வரலாற்றுத் தவறுகள் இனியும் இடம்பெறா

## அரசாங்கம் உறுதி

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்த விசாரணைகள் உரிய முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வரலாற்று தவறுகள் இனி இடம்பெறாது.தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு நிச்சயம் தண்டனை வழங்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடந்த அரசாங்கங்களைப் போன்று இந்த விவகாரம் குறித்த விசாரணைகளை காணாமலாக்குவதற்கோ அல்லது மறைப்பதற்கோ எமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது என்ற நம்பிக்கையை மக்களுக்கு வழங்குவதாகவும் அமைச்சரவை பேச்சாளர் குறிப்பிட்டார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள பக்கங்கள் எவ்வாறு நீக்கப்பட்டன என்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது. முன்னாள் சட்ட ஆய்வாளரின் தலையீட்டுடன் இந்த நடவடிக்கைகள் தொடர்பில்ஆலோசனைவழங்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் நாட்டு மக்களுக்கு எவ்வித அநீதியும் இடம்பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது. அதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணகளின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அறிக்கையிலுள்ள பக்கங்கள் நீக்கப்பட்டனவா? என்பதை வெளிக் கொண்டு வருவோம். இரண்டாவதாக முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கை யாரிமுள்ளது என்பது தனிப்பட்ட ரீதியில் எனக்குத் தெரியாது.

தற்போதைய அரசாங்கத்தின் மீது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வாய்ப்பில்லை. அரசாங்கம் இன்னும் முழுமையாக நியமிக்கப்படவில்லை. ஜனாதிபதி மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். எனினும் பதவியேற்று குறுகிய காலத்துக்குள் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

வரலாற்றில் இடம்பெற்ற தவறுகள் புதிய ஆட்சியின் கீழ் ஒருபோதும் இடம்பெறாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்னிறுத்தி, தண்டனை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் ஸ்திரமாகவுள்ளோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடந்த அரசாங்கங்களைப் போன்று அவற்றை காணாமலாக்குவதற்கோ அல்லது மறைப்பதற்கோ எமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது என்ற நம்பிக்கையை மக்களுக்கு வழங்குகின்றோம்.

அரசபுலனாய்வு பிரிவின் பணிப்பாளராக பதவி வகித்த மேஜர் ஜெனரல் சுரேஸ் சலே ஓய்வு பெற்றதையடுத்து, அந்த பதவிக்கு பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக குமார நியமிக்கப்பட்டுள்ளார். இந்த பதவியில் மாற்றம் ஏற்பட்டாலும், விசாரணைகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் அவ்வாறே இருக்க வேண்டும். ஓய்வு பெற்றுச் செல்லும் போது அவற்றை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியாது. எனவே விசாரணைகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் காணாமல் போயிருந்தாலும், அதற்கு பதிலளிப்பதற்கு அவர் பொறுப்புடையவராவார். - என்றார்.(05)

# உள்நாட்டு விவசாயிகள் நலன்கருதியே இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டன

நாட்டில் வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு என்பவற்றின் விளைச்சல் அதிகரித்துள்ளது. எனவே உள்நாட்டு விவசாயிகளுக்கு தமது விளைச்சலை நியாயமான விலைக்கு விற்பனை செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இறக்கு செய்யப்படும் வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கிற்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளது. எனவே, இந்த சந்தர்ப்பத்தில் வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டால் உள்நாட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவர்.

எனவேதான் உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரியை 50 ரூபாவிலிருந்து 60 ரூபா வரை 10 ரூபாவால் அதிகரிப்பதற்கும், வெங்காயதுக்கான இறக்குமதி வரியை 10 ரூபாவிலிருந்து 30 ரூபா வரையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இந்த தீர்மானத்தால் தேசிய உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தமது விளைச்சலை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியும்.

அத்தோடு விவசாயிகளுக்கான உர மானியத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும் தேர்தல் ஆணைக்குழு அதனை இடைநிறுத்தியது. எவ்வாறிருப்பினும் விவசாயிகள் மற்றும் ஏனைய தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய தேர்தல் ஆணைக்குழு அதற்கு அனுமதியளித்துள்ளது.

அதற்கமைய தற்போது ஒரு ஹெக்டயாருக்கு 10,000 ரூபாவாகக் காணப்படும் உர மானியம் 25,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனை வழங்குவதற்கான நடவடிக்கை அடுத்த வாரம் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். முதற்கட்டமாக 15,000 ரூபாவும், இரண்டாம் கட்டமாக 10,000 ரூபாவும் வழங்கப்படும்.

அதனைத் தொடர்ந்து பொலன்னறுவை, அநுராதபுரம், மஹியங்கனை, மகாவலி வலயத்திலுள்ள விவசாயிகளுக்கு படிப்படியாக உர மானியக்கொடுப்பனவு வழங்கப்படும். இதுவரையில் 2 பில்லியன் ரூபா அந்தந்த பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய தொகையும் விரைவில் வழங்கப்படும். மேலும் எரிபொருள் விலை அதிகரிப்புக்களால் மீனவர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் கடந்த வாரம் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகள் குறைக்கப்பட்டன. விலை குறைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள நிவாரணத்துக்கு அப்பால், எரிபொருள் விலை நிவாரணத்தை வழங்குவதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. நியாயமான முறையில் இந்தஎரிபொருள்கொடுப்பனவைவழங்கநடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

(05)

# போதைப்பொருள் மற்றும் மண் கடத்தலை கட்டுப்படுத்த வடக்கில் விசேட கலந்தாய்வு



வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள்கள் மற்றும் சட்டவிரோத மண் அகழ்வுகளை தடுத்தல், வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆராயப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்ட செயலர்கள், பிரதேச செயலாளர்கள், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடக்கு மாகாண இராணுவ, கடற்படை,விமானப்படை பொறுப்பதிகாரிகள், சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் தொடர்பான இரகசிய நடவடிக்கைகள் விரிவுபடுத்தல். போதைப் பொருளுக்கு எதிராக செயல்படும் சமூக செயற்பாட்டாளர்களது பாதுகாப்பு மற்றும் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன் போது, சிவில் சமூக பிரதிநிதிகளால் வடக்கு மாகாணத்தில் குறிப்பிட்ட சில பிரதேசரீதியாகவும் போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் சமூகப் பிணக்குகள் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கு உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. மண் அகழ்வில் போலியான அனுமதி பத்திரங்கள் தயாரித்து இடம்பெறும் மோசடி தொடர்பாகவும் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. மண்அகழ்வால்ஏற்படும்சூழல்பாதிப்புதொடர்பாகவும்கவனம் எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்கள் தொடர்பான விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டன.

வீதியில் பயணிப்பவர்களின் அவதானம் இன்மையால் பல விபத்துக்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. நகர்ப்பகுதி வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் உரிய சமிஞ்சைகள் இன்றி வீதிகளில் விரைவாக திரும்புதல் மற்றும் அதிக வேகம் போன்றவற்றிற்கு பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதன் போது வீதி விபத்துக்கள் தொடர்பாக மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெளிவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.(05)

# டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்தார் முருகன்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, 31 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்ட முருகன், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் அலுவலகத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 31 வருடங்களின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

முருகன் இலங்கையை சேர்ந்தவர் என்பதால் இலங்கை செல்வதற்கு ஆவணங்கள் இல்லை எனும் காரணத்தால் திருச்சி சிறப்பு முகாமில் சுமார் ஒன்றை வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவரை இலங்கைக்கு மீள அழைத்து வர அப்போது கடற்தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா சில நடவடிக்கைகளை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இவருடன் கைது செய்யப்பட்ட சாந்தன் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டு இருந்த போதே கடந்த பெப்ரவரி மாதம் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களின் சிந்தனைக்கு

**2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான இறுதித் தினம் நாளை. தமிழ்த் தேசியப் பரப்பில் பரபரப்பான கடைசி நேரக் காட்சிகள் அரங்கேறி வருகின்றன. தமிழ் அரசுக் கட்சி தவிர மற்றைய கட்சிகள் வேட்பாளர்களைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வது தெரிகின்றது. பல இடங்களிலும் தனித்துப் போட்டியிடுவது என்று இந்தக் கட்சிகள் –முடிவு செய்தாலும் கட்சியின் தலைமைப் பீட உறுப்பினர்களைத் தவிர்த்து வேறு நல்ல வேட்பாளர்களை அவற்றால் பெறமுடியவில்லை என்பது கண்கூடு. பலவீனமான கட்சிக் கட்டமைப்பும் மக்கள் செல்வாக்கின்மையுமே இதற்கான காரணங்கள். தமிழ் அரசுக் கட்சியில் வேட்பாளராகுவதற்காக முயல்கின்றவர்கள் பலர் என்பதால் அந்தக் கட்சியிலிருந்து மற்றைய கட்சிகள் வேட்பாளர்களை உருவிக் கொள்கின்றன அல்லது அதிருப்தியாளர்கள் சுயேச்சையாகக் களமிறங்குகின்றனர்.**

**இத்தனைக்கும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் வரைக்கும் இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர் ஒற்றுமை மற்றும் கட்சிகளின் ஒற்றுமை பற்றி முரசறைந்தவர்கள்தான். தமிழரின் இருப்புக்கு ஒற்றுமைப்படுவது அவசியம் என்று அவர்கள் மக்களுக்குப் போதித்தார்கள். ஆனால், பதவி ஆசை தமிழர்களின் ஒற்றுமையைவிட மேலானது என்று நாடாளுமன்றத் தேர்தலில் நிரூபித்துவிட்டார்கள். ஒற்றுமை முழக்கங்கள் எல்லாம் தமது தேர்தல் வெற்றிக்காக மட்டும்தான் என்பதை அவர்கள் வெளிப்படையாகவே இப்போது காட்டுகின்றார்கள். இவர்களில் பலர் இந்தத் தேர்தலில் தோற்றுப்போவார்கள் என்பது நிச்சயம். அதன் பின்னர் மீண்டும் ஒற்றுமை முழக்கத்தோடு மக்களிடம் வருவார்கள். ஏதோ மக்களின் நலன்களுக்காகத்தான் ஒற்றுமை அவசியம் என்று வேதம் ஓதும் சாத்தான்களாகத் சுற்றித் திரிவார்கள். வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள்தான் தமிழர்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்தவர்கள் என்று நீலிக்கண்ணீர் வடிப்பார்கள். அதற்குக் காரணம் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்ற பின்னர் மாகாண சபைத் தேர்தலிலாவது வாய்ப்பைப் பெறமுடியுமா என்று பார்ப்பதுதானே தவிர மக்கள் நலனின் அக்கறை கொண்டல்ல.**

**இப்படிப்பட்ட தேசியப் போலிகளும் போலித் தேசியவாதிகளும் விரட்டியடிக்கப்படவேண்டும். தமது வாய்ப்புக்கும் வசதிக்குமாக மக்களைப் பணயம் வைக்கும் இத்தகையவர்கள் பொது அரசியல் பரப்பிலிருந்து முற்றிலுமாக ஒதுக்கி வைக்கப்படவேண்டும். மக்கள் சிந்தித்துச் செயற்படுவதன் மூலம் தெளிவான அரசியல் தலைமை ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டும் இந்தத் தேர்தலில். சிதறிப் போய்விடாமல் சிறந்த தலைமை ஒன்றைத் தெரிந்தெடுப்பதன் மூலமே தமிழர்களுக்கு என்று ஒரு நிலையான, உறுதியான தலைமையை உருவாக்க முடியும். வாய்ப்பைத் தவறவிட்டால் மீண்டும் 5 வருடங்கள் காத்திருக்கவேண்டியிருக்கும்.**



# ஜேவிபியின் அமெரிக்க முகம் ஹரிணி

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

2020 பொதுத் தேர்தலுக்கான தேசியப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வேட்பாளரை நியமித்தபோது, ஜே.வி.பி., பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் (ய்ஷீவீபு) பிரபல கல்வியாளர்கள் மற்றும் பேராசிரியர்களில் இருந்து ஹரிணி அமரசூரியவைத் தேர்ந்தெடுத்தது.

அமெரிக்காவிற்கும் ஏனைய மேற்கத்திய நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை நன்கு புரிந்து கொண்டதன் காரணமாகவே ஜே.வி.பி. ஹரிணியை தெரிவு செய்தது. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு இடதுசாரிப் பின்னணிகொண்ட வேட்பாளர்கள் முன்மொழியப்பட்ட போதிலும், ஹரிணியை நியமிக்க ஜே.வி.பி. முடிவு செய்தது.

2015இல் மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்கா தன்னுடைய ஆட்டத்தில் மும்முரமாக இருந்த காலப்பகுதியில் அந்த நாட்டுடனும் பிற மேற்கத்திய நாடுகளுடனும் ஜே.வி.பியின் உறவுகள் வளர்ந்தன. இந்த நேரத்தில், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மகிந்தவின் ஆட்சிக்கு எதிராகப் பெரும் எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தது. ஹரிணி அதில் முக்கிய பங்கு வகித்தார். இந்தக் காலகட்டத்திலேயே அவர் ஜே.வி.பி.யுடன் நெருக்கமாக பணியாற்றத் தொடங்கினார்.

ஹரிணி 1988இல் அமெரிக்காவில் உள்ள சம்மர்வில்லே பல்கலைக்கழகக் கல்லூரியில் அந்நியச் செலாவணி மாணவர் திட்டத்தின் கீழ் படித்தார், மான்செஸ்டர்ஸ் மாநிலத்தில் அமைந்திருக்கிறது சம்மர்வில். அங்கு அவர் சுமார் ஒரு வருடம் படித்தார். அவர் பிரதமராக நியமனம் செய்யப்பட்ட செய்தியைக் கேட்டதும் அவருடன் கற்றவர்கள் மற்றும் அவரது ஆசிரியர்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டனர்.

தற்போது ஜேம்ஸ்டவுனில் வசிக்கும் அமரசூரியவின் பேராசிரியர் பாட்ரிசியா ஹாரல்சன் அம்மையார், ‘இந்தச் செய்தியைக் கேட்டதும் நாங்கள் பெரும் உற்சாகமடைந்தோம்‘ என்று ஒரு தொலைபேசி பேட்டியில் கூறினார்.

சம்மர்வில் கல்லூரியில் அமரசூரிய படித்தபோது, அங்கு ஆங்கிலம் கற்பித்த மற்றும் அகாடமிக் டெகாத்லான் பயிற்சியாளராக இருந்த வெய்ன் டிஜெனாரோ, ‘மற்றவர்களுடன் பழகுவதில் அவரது கருணையும் அக்கறையும் அப்போது தெளிவாக இருந்தது. அவர் மற்றவர்களின் யோசனைகளை ஏற்றுக்கொண்டார், அவருடைய வகுப்புத் தோழர்கள் மற்றும் சக தோழர்களின் வெற்றிக்காக உண்மையாக அக்கறை காட்டினார்” என்றார்.

அமரசூரிய படிக்கும்போது விளையாட்டுக் குழுவின் உறுப்பினராகவும் செயல்பட்டார். அவர் 1988இல் சம்மர்வில் ஹானர் ரோலை உருவாக்கினார், மற்ற சம்மர்வில் மாணவர்களுடன் வாஷிங்டன், டி.சி.க்கு பயணம் செய்தார், படைப்பாற்றலுக்காக 1989இல் சம்மர்வில்லில் சிறந்தவர் என்று பெயரிடப்பட்டார், பரிமாற்ற மாணவர்களுக்கான பள்ளியின் அமெரிக்கன் வெளிநாட்டு சேவை திட்டத்தில் பங்கேற்றார்.

தனது கல்வியை முடித்த பிறகு, ஹரிணி ஒரு அமெரிக்க அரசு சாரா நிறுவனத்தில் (NGO) வேலைக்குச் சேர்ந்தார். அவர் அங்கு மூத்த ஊழியராகப் பணியாற்றினார். அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளுடனான அவரது தொடர்புகள் இலங்கையில் மூன்றாவது அரசியல் சக்தியாக இருந்த ஜேவிபியை முதன்மைச் சக்தியாக மாற்றுவதற்காக மூலோபாய ரீதியாகப் பயன்படுத்தப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே, அநுரவே அமெரிக்க வேட்பாளர் என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் ஒரு கருத்து உருவாகியிருந்தது.

அனுர ஜனாதிபதியான பின்னர், ஹரிணி வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படுவார் என பலரும் நினைத்திருந்த போதிலும், அவருக்கு அந்தப் பதவி கிடைக்கவில்லை. மாறாக, வெளிவிவகார அமைச்சர் பதவி ஜே.வி.பி.யின் அரசியல் பீரோ உறுப்பினரான விஜித ஹேரத்துக்கு சென்றது. விஜித ஹேரத் பிரதமராக வருவார் என பலரும் எதிர்பார்த்திருந்த போதிலும் ஹரிணி தான் பிரதமராக பதவியேற்றார்.

அநுரா ஜனாதிபதியாக பதவியேற்றதும், ரஷ்யத் தூதுவர் ரஷ்ய ஜனாதிபதி புட்டினிடமிருந்து ஒரு



செய்தியுடன் அவரைச் சந்தித்தார், ரஷ்யாவுடனான ஜே.வி.பி.யின் உறவுகள் அமெரிக்காவுடனான அதன் உறவுகளைவிட வலுவானதாக இருந்ததே அதற்குக் காரணம். நவம்பர் 21, 2023 அன்று, அரகலயா (எதிர்ப்புகளுக்கு) பின்னர், ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து உயர்மட்டக் குழு இலங்கைக்கு வந்தது. ஜே.வி.பி. தலைமையகத்தில் நடந்த சந்திப்பில் இரு தரப்பினரும் தமக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தினார். ஜே.வி.பி தரப்பில், விஜித ஹேரத் அதில் பங்கேற்றதுடன், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து, துணைத் தலைவர் ரஷியன் மற்றும் மத்திய குழுவின் துணைத் தலைவர் கிளமெனோவ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அனுரா ஜனாதிபதியான பிறகு, புட்டினின் தூதுவர் கொண்டு வந்த செய்தியில் ரஷ்யாவில் நடைபெறும் ’பிரிக்ஸ்’ மாநாட்டிற்கான அழைப்பும் உள்ளடக்கியிருந்ததாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிராக மற்றொரு நாடு தன்னுடன் இணைந்திருப்பதாக புடின் உணர்ந்திருக்கலாம். புட்டினின் பார்வை சரியானதா என்பது பொதுத் தேர்தலுக்குப் பிறகு அனுரவின் வெளியுறவுக் கொள்கையை தேசிய மக்கள் சக்தியா அல்லது ஜே.வி.பியா தீர்மானிக்கிறது என்பதைப் பொறுத்தே அமையும்.

# எயிட்ஸ் நோயாளர் எண்ணிக்கை அம்பாந்தோட்டையில் அதிகரிப்பு

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்ட பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவின் வைத்திய அதிகாரி ஒருவர் இது தொடர்பில் தெரிவிக்கையில் -

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரம் 87 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான எயிட்ஸ் நோயாளர்கள், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெள மற்றும் திஸ்ஸமஹாராம ஆகிய பிரதேசங்களிலிருந்து பதிவாகியுள்ளனர்.

மேலும், எயிட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆரம்ப கட்டங்களிலேயே உரிய சிகிச்சைகளை அளிப்பதால் அவர்களைக் குணப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# 3 சிறைச்சாலை அதிகாரிகள் பணியிலிருந்து இடைநீக்கம்

## கைதிகள் தப்பி ஓடியமையால்

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு கைதிகள் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் மூன்று சிறைச்சாலை அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் காமினி திசாநாயக்க இது தொடர்பில் தெரிவிக்கையில் -

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு கைதிகள் கடந்த 1 ஆம் திகதி அன்று சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

போதைப்பொருள் கடத்தல்கள், திருட்டு மற்றும் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் ஆகியவை தொடர்பில் பல்வேறு வழக்குகள் காணப்படும் நான்கு கைதிகளே இவ்வாறு தப்பிச் சென்றிருந்தனர்.

தப்பிச் சென்ற கைதிகளில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் தலைமறைவாக இருக்கின்றார்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கைதிகள் தப்பிச் செல்வதற்கு உதவி செய்ததாக கூறப்படும் மூன்று சிறைச்சாலை அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் கசியப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் மற்றும் பாடசாலை ஆசிரியரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் சமூக ஊடகங்களில் கசியப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# ஊழல் அரசியல்வாதிகளை நிறுத்தினால் பிரதான அரசியல் கட்சிகளை மக்கள் முற்றாக நிராகரிப்பர்

## சிவில் சமூகப் பிரதிகள் எச்சரிக்கை




பொதுமக்கள் தற்போதைய ஊழல் கலாசாரத்திற்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்துள்ளதால் பொருத்தமான உரிய வேட்பாளர்களை நிறுத்தாவிட்டால் எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிரதான கட்சிகள் முற்றாக நிராகரிக்கப்படலாம் என சிவில் சமூக பிரதிநிதிகள் எச்சரித்துள்ளனர்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் சிவில் சமூக பிரதிநிதிகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

40இற்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புகள் இணைந்து பொருத்தமான வேட்பாளரை பொதுமக்கள் தெரிவு செய்வதற்கான 10 அம்ச அளவுகோல்களை மக்களிற்கு அறிமுகப்படுத்தியுள்ளன.

சுத்தமான கரங்களை கொண்ட ஊழலில் ஈடுபடாத அரசியல்வாதிகளை எதிர்காலத்தில் தெரிவுசெய்யவேண்டும் என்பதுகுறித்து மக்கள் மிகுந்த விழிப்புணர்வுடன உள்ளதால் அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் தங்கள் வேட்பாளர் தெரிவுகுறித்தும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேர்மையற்ற ஊழல் அரசியல் பின்னணி கொண்டவர்களை இம்முறை பொதுமக்கள் நிச்சயமாக நிராகரிப்பார்கள் எனத் தெரிவித்துள்ள அவர் அவ்வாறான அரசியல் கட்சிகள் வரலாற்றின் குப்பைதொட்டிக்குள் தூக்கிவீசப்படும் நிலையை ஏற்படுத்துவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

பொருத்தமான வேட்பாளரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவது குறித்து மாத்திரமல்லாமல் பொதுமக்கள் நாடாளுமன்ற விவகாரங்கள் குறித்த சிறந்த அறிவுள்ளவர்களை அனுப்புவது குறித்தும் கவனம் செலுத்தவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் இந்தநாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்ற விரும்பினால் அவர்கள் ஊழல் அரசியல்வாதிகளை தெரிவுசெய்யக்கூடாதுஎன மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதி அநுரகுமாரவுடன் டக்ளஸ் தொலைபேசி பேச்சு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தவுக்கும் இடையில் உரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

வேலணைப்பிரதேசத்துக்குபொதுமக்களைச்சந்திப்பதற்கு டக்ளஸ் தேவானந்தா விஜயம் செய்திருந்த தருணத்தில், இந்திய இழுவைப்படகுகள் தமது பகுதிகளுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் நிலைமைகள் அதிகரித்து வருகின்றன என்ற விடயத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்விதமான நிலைமைகள் தொடர்கதையாக இருக்கின்ற நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரின் இலங்கை விஜயத்தின்போது இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைதான ஐம்பது இந்திய மீனவர்கள் எதுவிதமான நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆகவே, தமது வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு வருகின்றமையை புதிய ஆட்சியாளர்கள் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் டக்ளஸிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இவ்விதமான நிலையில் குறித்த பகுதியில் நின்றவாறே டக்ளஸ், ஜனாதிபதி அநுரவை தொலைபேசியில் அழைத்து உரையாடியுள்ளார். இதன்போது பொதுமக்கள் வெளிப்படுத்திய ஆதங்கத்தினையும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

அதன்போது, ஜனாதிபதி அநுரகுமார குறித்த விடயம் சம்பந்தமாக தான் கவனம் செலுத்துவதாகவும் அது தொடர்பில் விரைவில் டக்ளஸுடன் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(05)

# புதையல் தோண்டிய மூவர் நிட்டம்புவையில் கைது

நிட்டம்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பஸ்யால பிரதேசத்தில் புதையல் தோண்டியதாக கூறப்படும் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

நிட்டம்புவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஸ்யால, வதுரகம மற்றும் ஜா -எல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29, 48 மற்றும் 54 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பொருள்கள் மற்றும் பூஜை பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுதொடர்பானமேலதிக விசாரணைகளைநிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு இராணுவத்தினரால் வீடு அன்பளிப்பு



பெண் தலைமை தாங்கும் குடும்பம் ஒன்றிற்கு கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவு முகாம் இராணுவத்தினரால் வீடொன்று நிர்மாணித்து கொடுக்கப்பட்டு உத்தியோக பூர்வமாக நேற்று (புதன்கிழமை) கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினால் வறுமைக் கோட்டின்



கீழ் வாழும் குடும்பத்துக்கு வீடு ஒன்றை நிர்மாணித்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டம் இலங்கை இராணுவத்தின் 24 வது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அனில் பெரேராவின் ஆலோசனைக்கமைய 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன வழிகாட்டலில் அம்பாறை கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் கட்டளை தளபதி மேஜர் ருவான் சேனாரத்ன ஏற்பாட்டில் அம்பாறைமாவட்டம்கல்முனைவடக்குபிரதேச செயலகத்திற்குட்பட்ட சேனைக்குடியிருப்பு -1 கிராம உத்தியோகத்தர் பிரிவில் குறித்த வீடொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும்நிகழ்வுகடந்தமேமாதம்இடம்பெற்றது.

இதன் பின்னர் குறித்த வீடு கணவனை இழந்து9வயதுமகள்மற்றும்6வயதுமகனுடன் வாழ்ந்து வந்த பயனாளியான துரைராசா சுரேஜினிக்கு தமிழ் முஸ்லீம் தனவந்தர்களின் ஒத்துழைப்புடன் இராணுவத்தினருடைய கட்டுமான பங்களிப்புடன் இந்த வீடு கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் உள்ளிட்டோர் வீட்டுப் பெறுநருக்கான சாவியும் தகுதியான குடும்பத்திற்கு வீட்டு உபயோகப் பொருட்களையும் அன்பளிப்புச் செய்தார். அத்துடன் வீட்டு நிர்மாண பணியில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டில் இடம்பெற்ற கொடூரமான பயங்கரவாதத்தை தோற்கடித்து எதிர்கால சந்ததியினருக்கு அழகிய நாட்டை உருவாக்கி எம்முடன் கடமையாற்றும் பொதுமக்களுக்கும் சட்ட ஒழுங்கையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் நோக்கில் அவர்களின் இயல்பு வாழ்க்கை உயர்த்தப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு திருமதி துரைராசா சுரேஜினி என்ற ஒரு குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்திற்கு வீடு கட்டி கொடுக்கப்பட்டது.அத்துடன் இந்த வீட்டை நிர்மாணிப்பதன் மூலம் முழு சிவில் சமூகத்திடம் இலங்கை இராணுவத்தின் நம்பிக்கை மரியாதை மற்றும் நல்லெண்ணத்தை மேலும் மேம்படுத்த இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும் என இராணுவத்தின் உயர் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஏ.பி.ஆர்.எஸ். சந்திரசேன அம்பாரை கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி உள்ளிட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(05)

# மரத்தின் கிளைகளை வெட்ட முயன்றவர் மின் தாக்கி சாவு

பிலியந்தலை, மடபாத்த பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், யசசிறிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

உயிரிழந்த நபரின் சகோதரி கடந்த சில நாள்களுக்கு முன்னர் வீட்டின் குளியலறையில் தவறி விழுந்து காயமடைந்துசிகிச்சைக்காககளுபோவிலவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனால், உயிரிழந்த நபர் தனது மனைவியுடன் இணைந்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள சகோதரியை சந்திப்பதற்காக பிலியந்தலை, மடபாத்த பிரதேசத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது, உயிரிழந்த நபர் தனது சகோதரியின் வீட்டிற்கு சென்றுள்ள நிலையில் வீட்டின் பின்புறத்தில் இருந்த மரத்தின் கிளைகளை வெட்ட முயன்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கெஸ்பேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இளைஞனின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

எல்பிட்டியில் பொது விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள கிணற்றிலிருந்து இளைஞன் ஒருவன் செவ்வாய்க்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக எல்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

வெய்ஹேனமத்தகபிரதேசத்தைச்சேர்ந்த23வயதுடைய இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் கடந்த 7 ஆம் திகதி எல்பிட்டி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இசைநிகழ்ச்சிக்குச்சென்றுள்ளதாகபொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக எல்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சம்மாந்துறையில் குடியிருப்புகளை சேதப்படுத்திய தனியன் யானைகள்



*தனியன் யானை ஒன்று திடீரென உட்புகுந்து மக்களின் குடியிருப்புக்களை சேதப்படுத்தியுள்ளது.*

*நேற்று (புதன்கிழமை) காலை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை தமிழ் பிரிவு 4 - குவாசி நீதிமன்றத்திற்கு முன்னால் உள்ள வீதியில் தனியன் யானை ஒன்று வீட்டு காணிகளில் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.*

*கடந்த 2 தினங்களாக தனியன் யானை ஒன்று சம்மாந்துறை நூலகம் குவாஸி நீதிமன்ற பகுதிகளில் அட்டகாசம் செய்து சேதங்களை விளைவித்து வருவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.*

*எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (05)*

# 11 வயது மாணவி மீது பாலியல் துஷ்பிரயோகம்

## பாடசாலை ஆசிரியர் கைது

11 வயது மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என திஸ்ஸமஹாராம பொலிஸார் தெரிவித்தனர்.

திஸ்ஸமஹாராம, சேனபுர பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய பாடசாலை ஆசிரியரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபரான பாடசாலை ஆசிரியர் கடந்த 2 ஆம் திகதி அன்று பாடசாலை வளாகத்தில் தனது பிறந்த நேற்று கொண்டாடியுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான பாடசாலை ஆசிரியர் தனது பாடசாலையில் 7 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 11 வயதுடைய மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இது தொடர்பில் திஸ்ஸமஹாராம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திஸ்ஸமஹாராம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க தயார் என்கிறது அமெ.





இலங்கையின் பொருளதாரத்தை பலப்படுத்தத் தேவையான எந்தவொரு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாரென அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தக பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கத் தயாரென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியினையும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி முகவர் நிலையத்தின் ஊடாக நிதி உதவிகளை வழங்கத் தயாரெனவும் தூதுவர் இதன்போது தெரிவித்தார். ஊழல் மோசடிகளை மட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்குஅமெரிக்க தொழில்நுட்ப உதவிகளை வழங்குமெனவும் அவர் உறுதியளித்தார்.

சிறந்த அரச நிர்வாகத்திற்காகவழங்கக்கூடிய எந்தவொரு உதவியையும் வழங்குவதோடு, பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்தில் அதற்கான உதவிகளை வழங்கவும் அவர் இணக்கம் தெரிவித்தார்.

மீள் புதுபிக்கத்தக்க வலுசக்தி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குதல் மற்றும் கிராமங்களின் வறுமையை ஒழிப்பதற்காக புதிய ஜனாதிபதியால் முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமெரிக்க தூதுவர் உறுதியளித்தார்.

தற்போது செயற்படுத்தப்படும் கிராமிய பாடசாலைகளின் பகல் உணவு வேலைத்திட்டத்தை நகர பாடசாலைகளிலும் வழங்க உதவிகளை வழங்கவிருப்பதாகவும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இலங்கை மற்றும் மாலைத்தீவிற்காக ஐக்கிய ராஜ்ஜியத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிலையத்தின் பிரதி பணிப்பாளர் ஜஸ்டின் டிவென்ஷோ மற்றும் பொருளாதார நிபுணர் கிறிஸ்டோபர் குஷ் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.(05)

# ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவிற்கு அமெ. ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்து





ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை நினைவு கூர்ந்துள்ள ஜோ பைடன், முழு அமெரிக்க மக்களின் சார்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதோடு, இலங்கையின் ஜனநாயகத்தை மேலும் பலப்படுத்துவதன் மூலம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியை அமைதியான முறையில் முன்னெடுத்தமைக்கும் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

'இந்த தேர்தல் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின்பலத்தையும்,ஜனநாயகத்தின் அடிப்படைகளான அமைதியான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலின் மூலம் தமது எதிர்காலத்தைவடிவமைத்துக்கொள்வதற்கான இலங்கை மக்களின் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது' எனவும் ஜோ பைடன் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் ஸ்திரத்தன்மை, சுபீட்சம் மற்றும் முன்னேற்றத்தை அடைவதற்கு அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஒத்துழைப்பை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சி, பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஜனநாயக ஆளுகை ஆகிய பல துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாகவும், இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் நிலையான, வளமான மற்றும் நியாயமான நாடொன்றைப் பற்றிய எதிர்பார்ப்பை அடைவதற்கும் அமெரிக்காவின் ஒத்துழைப்பு கிட்டும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க-இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிப்பதாகவும் பிராந்தியத்திற்கு நன்மை பயக்கும் மற்றும் ஜனநாயகக் கொள்கைகளைப் பாதுகாக்கும் முன்னெடுப்புகள் தொடர்பில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன்செயற்படதயாராகஇருப்பதை இந்த வாழ்த்துச் செய்தி எடுத்துக்காட்டுகிறது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## பொருளாதார....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புவார்கள் என்று எண்ணுகின்றேன். புதிய ஆளும்தரப்பை விமர்சிப்பதற்கு நான் தயாராக இல்லை. அவர்களுக்கு இன்னும் சிறிது காலம் வழங்கப்பட வேண்டும். ஆனால் சில விமர்சனங்களை முன்வைக்க வேண்டிய தேவையும் காணப்படுகிறது.

தேசிய கடன் மறுசீரமைப்பின் போது வேலை செய்யும் மக்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனை நாம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்தோம். தேசிய கடன் மறுசீரமைப்பின்போது ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்கான வேலைத்திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம் என்பதை தெரிவித்திருக்கின்றோம்.

அநுரகுமாரதிஸாநாயக்கவின்ஆளும்தரப்பு ஒரேநாளில்இவைஅனைத்துக்கும்இணக்கம் தெரிவித்தமை கவலைக்குரியது. அத்தோடு இவர்கள் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்பட்ட இழப்புத் தொடர்பிலும் ஒரு வார்த்தையேனும் கூறவில்லை. அடுத்த நாடாளுமன்றத்தில் இதற்காக போராடுவேன். தேசியக் கடன் மறுசீரமைப்பின் ஊடாகவே ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்பட்ட இழப்பீட்டைச் சரி செய்வதற்காக குரல் கொடுப்பேன் என்றார்.

## ஞானசாரருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குத் தொடரப்பட்டது.

நீதிவான்தனுஜாலக்மாலிமுன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வண. ஞானசார தேரர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. இதன்படி, சந்தேகநபரை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

## தமிழ் தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வேட்புமனு தாக்கல்செய்தது.

மட்டக்களப்புபழையமாவட்டசெயலகத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். பெண் பிரதிநிதி ஒருவர் உட்பட எட்டுப்பேர் கொண்ட வேட்பு மனுதாக்கல் செய்யப்பட்டது.

அதன் பினனர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்ததாவது:

எங்களது மக்களது உரிமைகளை பெறுவதற்கு நாம் ஆணித்தனமாக ஒற்று மையாக இருக்க வேண்டிய தேவைள்ளது, வடக்குகிழக்கில்அனைத்துமாவட்டங்களிலும் தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக ஜனநாயக தமிழ் தேசியக் முன்னணி செயற்படுகின்றது.

எங்களது வாக்குகளைப் பிரிப்ப தற்காக சில சுயாட்சிக் குழுக்களும் இங்கு களமிறங்கியுள்ளன. அவர்கள் பெரும்பான் மையினரின் தூண்டுதலால் தமிழ் மக்களின் வாக்கை பிரிப்பதற்கு சிதைப்பதற்கு களம் இறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள்கூட தங்களின் சுய இலாபத்திற்காக ஒற்றுமையாக செயல்பட்டு பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற வேண்டும்என்றஎண்ணம்இல்லாமல்தாங்கள் சுயநலத்திற்காக தங்களது கட்சி பிரபல்யம் அடையவேண்டும் என்பதற்காக வடக்கு கிழக்கில் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் நடந்து கொண்டுள்ளார்கள்.

எங்களால் தமிழ் மக்களுக்கு தெரிவிக் கக்கூடிய விடயம் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எங்கள் எட்டு பேரில் யார் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவார் என்பது எமக்கு முக்கியமல்ல சங்கு சின்னம் அமோக வெற்றி பெற வேண்டும் என்றார்.

## மின்சார....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளிடமிருந்து உள்ளீடுகளைச் சேகரிப்பதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

புதிய திருத்தங்கள் எந்தவொரு தீங்கும் விளைவிக்காமல் நாட்டிற்கும் இலங்கை மின்சார சபைக்கும் அதிகபட்ச வினைத்திறன் மற்றும் நன்மைகளை வழங்குவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கைமின்சாரசபையின்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று பேராசிரியர் ஹேமபால தெரிவித்தார்.

முன்மொழியப்பட்ட திருத்தங்கள் புதிய நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்தஜூன் 6 ஆம்திகதிநிறைவேற்றப்பட்ட மின்சாரச் சட்டம், இலங்கை மின்சார சபையை 12 நிறுவனங்களாகப் பிரிப்பதற்கும், தொழிலாளர்களை நெறிப்படுத்துவதற்குமான விதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

இலங்கை மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் இந்த நடவடிக்கைகளை கடுமையாக எதிர்த்துள்ளன, அவை மின்சாரசபையை தனியார்மயமாக்கும் முயற்சி என்று குற்றம் சாட்டின.

## நுவரெலியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இந்தத் தபாலகக் கட்டடத்தை ஹோட்டலாக மாற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருந்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்டிருந்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

150 ஆம் ஆண்டு தபால் தின நிகழ்வு பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில் இன்று நடைபெற்றது. அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த போதே அமைச்சர் விஜித ஹேரத் இதனை குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

## அமெ. கடற்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, நாடுகடந்த அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான அமெரிக்காவின்உறுதிப்பாட்டைமீண்டும்உறு திப்படுத்துவது மற்றும் அமெரிக்காவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வளர்ந்து வரும் ஒத்துழைப்பைப் பற்றி கலந்துரை யாடவுள்ளார். இதேவேளை, இந்திய-பசிபிக் பிராந்தி யத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதில் முக்கிய பங்காளியான இலங்கையுடனான பாதுகாப்புஉறவுகளைவலுப்படுத்துவதற்கான அமெரிக்காவின் வலுவான அர்ப்பணிப்பை இந்த விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 நாட்டுத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியட்நாமுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான பௌத்த மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி விமான சேவைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையை வியட்நாம் சுற்றுலாப் பயணிகளின் முன்னணித் தளமாக மாற்றுவதன் மூலம் இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான உறவுகளை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும்கவனம்செலுத்தப்பட்டதுடன், இரு நாடுகளுக்குமிடையிலானசுற்றுலாத்துறையை விரிவுபடுத்துவதற்கான புதிய வாய்ப்புகள் குறித்து கண்டறிவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் தூதுவர் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான இராஜதந்திர, பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேலும் மேம்படுத்துவதில்இருநாடுகளின்அர்ப்பணிப்பு தொடர்பாகவும் இந்த சந்திப்பில் மேலும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் பைடூன் மகபன்னபொன் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

கடந்தஜனாதிபதித்தேர்தலில்வெற்றியீட்டிய ஜனாதிபதிக்கு தனதும் தாய்லாந்து அரசாங்கத்தினதும் வாழ்த்துக்களைத் தெரிவித்த தாய்லாந்து தூதுவர், தாய்லாந்து நாட்டு மன்னர் வஜிரலோங்கொன் அனுப்பிய விசேட வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கையளித்தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியின் ஆட்சிக்கு தனது பாராட்டுக்களை தெரிவித்த தாய்லாந்து தூதுவர், புதிய அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புகளை நனவாக்குவதற்கு தாய்லாந்து அரசாங்கம் ஆதரவளிக்கும் எனவும் தெரிவித்தார்.

இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நன்மைகள் பற்றியும் தாய்லாந்து தூதுவர் விளக்கமளித்ததுடன், அது பரஸ்பர பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும், இலங்கையில் தாய்லாந்து முதலீட்டை ஊக்குவிப்பதற்காக குறிப்பாக உள்ளூர் பழங்கள் மற்றும் பொருட்களை பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

தாய்லாந்தின் சுற்றுலாத்துறையின் வெற்றிக்கு உதவிய காரணிகள் குறித்து ஜனாதிபதியிடம் எடுத்துரைத்த தாய்லாந்து தூதுவர்,சுற்றுலாத்துறையைமேம்படுத்துவதில் இலங்கையுடன் ஒத்துழைப்புடன் செயற்பட விருப்பம் தெரிவித்தார்.

இலங்கையின் வரலாற்று பௌத்த பாரம்பரியத்திற்கு விசேட முக்கியத்துவம் அளித்து, தாய்லாந்து சுற்றுலாப் பயணிகளின் முன்னணி இடமாக இலங்கையை மாற்றுவதற்கு தாய்லாந்தின் ஆதரவு கிட்டும் எனவும் அவர் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், இரு நாடுகளுக்கும் இடையில் விசா இல்லாத சுற்றுலாத்துறை மேம்பாடு குறித்தும் இரு தரப்பு கவனமும் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலானவலுவானஉறவுகளைமேலும் உறுதிப்படுத்திய இந்த சந்திப்பில், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா போன்ற முக்கிய துறைகளில்இருநாடுகளுக்கும்இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் பெலிக்ஸ்நியூமன்நேற்று முற்பகல்ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு வாழ்த்து தெரிவித்த ஜேர்மன் தூதுவர் பெலிக்ஸ்நியூமன்,ஜேர்மன்ஜனாதிபதிஓலாஃப் ஸ்கொல்ஸின் வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதிக்கு வழங்கிவைத்தார்.

இலங்கையைபிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நிரந்தர பங்காளியாக ஜேர்மனி உறுதி பூண்டுள்ளதாக இந்த சந்திப்பில் தூதுவர் பெலிக்ஸ் நியூமன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில், ஜேர்மனிக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் பரஸ்பர நலன்களின் அடிப்படையில் அந்த ஒத்துழைப்பை மேலும் பேணுவதற்கு ஜேர்மனி கொண்டுள்ள அக்கறையை தூதுவர் நியூமன் வலியுறுத்தினார்.

மனிதவள அபிவிருத்தியில் ஜேர்மனியின் 70வருடஅனுபவத்தைவலியுறுத்தியதூதுவர், இலங்கையில் மனித வள அபிவிருத்தியை வலுப்படுத்ததனதுஆதரவைவழங்குவதாகவும் உறுதியளித்தார்.

மேலும், இலங்கையின் தொழில்நுட்பக் கல்வித் துறையில் முக்கிய பங்காற்றுகின்ற கட்டுபெத்த மற்றும் கிளிநொச்சி ஆகிய இரண்டு ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிகளின் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கு ஜேர்மன் உதவி வழங்கப்படுமெனவும் தூதுவர் குறிப்பிட்டார். இலங்கையில் அரச சேவையின் வினைத்திறனை அதிகரிக்க ஜேர்மனி ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக தூதுவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் ஏற்றுமதித் திறனுக்கு அமைவாக இலங்கைக்கு சிறந்த வாய்ப்பை வழங்கக் கூடிய இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியை பிரதிநிதித்துவப்படுத்த ஆர்வம் காட்டுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் அவர் கோரினார்.

மேலும், தூதுவர் நியூமன் இலங்கைக்கும் ஜேர்மனிக்கும்இடையிலானவர்த்தகஉறவுகள் குறித்து மேலும் கவனம் செலுத்தியதுடன், அந்த வாய்ப்புகளை கண்டறிந்து ஜேர்மன் தொழில் சந்தையில் நுழைய முயற்சிக்குமாறு இலங்கைக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் செழுமைக்கு ஜேர்மனியின் தொடர்ச்சியான ஆதரவை வலியுறுத்திய தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் உறுதிப்படுத்தினார்.

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு வாழ்த்துத் தெரிவித்த தூதுவர் கலாநிதி சிறி வோல்ட், சுவிட்சர்லாந்து அரசாங்கம் மற்றும் அந்நாட்டு மக்களின் வாழ்த்துக்களையும் ஜனாதிபதிக்கு தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது செயற்படும் சர்வதேசநாணயநிதியத்தின்வேலைத்திட்டத்தின் ஊடாக சுவிட்சர்லாந்து இலங்கைக்கு ஆதரவளிக்க உறுதி பூண்டுள்ளதாக உறுதிப்படுத்திய தூதுவர், ஊழலுக்கு எதிரான ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முயற்சிகளுக்கு சுவிட்சர்லாந்து ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறையில் சுவிட்சர்லாந்தின் நிபுணத்துவத்தையும் இதன்போது எடுத்துரைத்தஅவர், பொருளாதாரவளர்ச்சியை ஊக்குவிப்பதில்அந்ததுறைகளில்இலங்கைக்கு ஆதரவை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு மறுசீரமைப்புகள் மற்றும் தொழிலாளர் இடம்பெயர்வு ஆகிய பகுதிகள் குறித்து இதன்போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்த துறைகளில் இலங்கையின் திறன்களை மேலும் மேம்படுத்துவதற்கு சுவிட்சர்லாந்து ஆதரவை வழங்கும் என்று தூதுவர் சிறி வோல்ட் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் சுவிட்சர்லாந்திற்கும் இடையிலான வலுவான இராஜதந்திர உறவுகளையும்,இலங்கையின்நிலைபேறான அபிவிருத்தி மற்றும் நிர்வாக விடயங்களில் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சுவிட்சர்லாந்தின் தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் தூதுவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

## பொறுப்புக்கூறலுக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியன அடங்கிய அறிக்கையொன்றை சமீபத்தில் வெளியிட்டமையை உலகத் தமிழர் பேரவை வரவேற்கிறது. தொடரும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டி இலங்கையில் பொறுப்புக்கூறலும் நல்லிணக்கமும் முன்னெடுக்கப்படுவதற்கு தேசிய, சர்வதேச செயற்பாடுகள் அவசியம் என்பதை இவ்வறிக்கை முன்வைக்கிறது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆகியோருக்குத் தொல்லை தருதல், காணி பறிப்பு, இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகளைத் தடுத்தல் போன்ற எழுந்தமானமான பொலிஸ் நடவடிக்கைகள் போன்ற மனித உரிமை மீறல்கள் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில்தொடர்ந்தும்நடைபெற்றுவருகின்றன என மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரயோகத்தை உடனடியாக நிறுத்துவோம் என்று அரசாங்கம் அளித்த உறுதிமொழியையும் மீறி இச்சட்டம் தொடர்ந்தும் பிரயோகப்படுத்தப்படுகிறது என இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், கடந்த 18 மாதங்களில் மட்டும் 46 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்; 2,845 துன்புறுத்தல் சம்பவங்களும் 21 சட்டத்துக்குப் புறம்பான கொலைகளும் 26 தடுப்புக் காவல் மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

காணாமற்போனோர் அலுவலகத்தின் திறனின்மை, போதாமை போன்ற குணாதிசயங்களைத் தான் இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் காணாமலாக்கப்பட்டிருந்தும் ஒரே ஒருவரது மரணத்தையும், 4 பேர் கணாமற் போனமை பற்றியுமே இவ்வலுவலகம் இதுவரை கண்டறிந்திருக்கிறது. தமது விசாரணை அதிகாரங்களைப் பயன்படுத்தி உண்மைகளைக் கண்டறிவதை விடுத்து பாதிக்கப்பட்டவர்களிடம்மேலதிகதகவல்களைக் கேட்டு கோப்புக்களை மூடுவதற்கான முயற்சிகளை எடுப்பதன் மூலம் அவர்களை மீண்டும்மனஉளைச்சலுக்குஇவ்வலுவலகம் ஆளாக்குகிறது.

மனிதப் புதைகுழிகளும் ஆணையரின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. கடந்த பல பத்தாண்டுகளாகப் பல புதைகுழிகள் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வு

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## பொறுப்புக்கூறலுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் முடிந்திருந்தாலும் மனித எச்சங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டு அவரவர் குடும்பங்களிடம் கையளிக்கப்படவில்லை என இவ்வறிக்கை கூறுகிறது. அகழ்வுகள் மற்றும் அடையாளம் காண்பதற்குத் தேவையான மனித, பண, தொழில்நுட்ப உதவிகளை வழங்கி சரவதேச நியமங்களுக்கேற்ப இப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் தேவையானால் இவ்விடயத்தில் அரசாங்கம் சர்வதேச உதவிகளைக் கோரவேண்டுமெனவும் மனித உரிமைகள் ஆணையர் சிபார்சு செய்திருக்கிறார்.

இவ்விடயம் தொடர்பாக தாம் நேசித்தவர்களுக்காக உண்மையும் நீதியும் கிடைக்கவேண்டும் எனப் பல தசாப்தங்களாகப்பொறுமையோடுகாத்திருக்கும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் கோரிக்கைகள் பற்றி 'இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல்' எனப்பெயரிடப்பட்டு மனித உரிமை ஆணையரால் மே 2024 இல் வெளியிடப்பட்ட அறிக்கையை உலகத் தமிழர் பேரவை பெரிதும் மெச்சுகிறது. இக்குடும்பங்களுக்கு உண்மையைத் தெரிவிக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது எனவும் இக்குற்றங்கள் மீது விசாரணைகள் நடத்தப்படுவதுஇக்குடும்பங்களுக்குமட்டுமல்ல இலங்கையின் சமூகங்களிடையேயான ஆற்றுப்படுத்தலுக்கும் ஆவசியம் என ஆணையர்இவ்வறிக்கையில்குறிப்பிட்டுள்ளார்.

உண்மையும் நீதியும் கிடைக்க வேண்டுமென்பதற்காகப் பல தசாப்தங்கள் காத்திருந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விரக்தியே எஞ்சி நிற்கிறது. 'பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கு வேறு வழிகள் கண்டறியப்படவேண்டும்','தண்டிக்கப்படாமை என்ற சுழற்சிக்குள் இருந்து வெளியே வர சர்வதேச சமூகம் அதிகம் பிரயோகிக்கப்படாத சர்வதேச விதிகளின் எல்லை தாண்டிய பிரயோகம் போன்ற மாற்று உத்திகளைப் பிரயோகிக்கவேண்டும்' என்பன போன்ற மேற்கோள்கள் இவ்வறிக்கையில் காணப்படுவதை அவதானிக்கையில் ஆணயரின்விரக்தியும்இதில்அம்பலமாகிறது.

'இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கமே மேற்கூறப்பட்ட விடயங்களைச் சாத்தியமாக்கும். மனித உரிமைகள் கண்காணிப்பகம் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகிய அமைப்புகளின் கோரிக்கைகளின் பிரகாரம் 'இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்திற்கு' வழங்கப்பட்ட ஆணையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது விஸ்தரிக்குமாறு ஐ.நா.மனித உரிமைகள் சபை அங்கத்துவ நாடுகளிடம் கோருவதோடு இம்முக்கியமான செயற்பாடு நிதிக் குறைபாடுகளால் முடக்கப்படாதவாறு ஐ.நா. செயலாளர் நாயகம் பார்த்துக்கொள்ளவேண்டுமெனவும் உலகத்தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

இத்திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கலைத் தொடர்ந்து இதன் பெறுபேறுகளை, வட கொரியா மற்றும் மியன்மார் நாடுகள் மீதான ஐ.நா.வின் சிறப்புத்தூதுவர்மற்றும்விசாரணைக்கமிசன் அறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டதைப் போன்று, மனித உரிமைகள் ஆணையர் இவ்வறிக்கையையும் இதர ஐ.நா. அமைப்புகளுக்கும், ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கும்மேலதிகநடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கவேண்டுமெனஉலகத்தமிழர் பேரவை வலியுறுத்துகிறது. இதன் மூலம் தசாப்த கால செயற்பாடுகள் சர்வதேச உயர்மட்டகண்காணிப்புகளுக்குட்படுத்தப்பட்டு தொடர்ச்சியும் பேணப்படுமெனவும் தொடர்ச்சியான சர்வதேச அவதானம் மற்றும் அர்த்தமுள்ள செயற்பாடுகளும் இலங்கை உண்மையான பொறுப்புக்கூறல், நீதி, நல்லிணக்கம் ஆகியவற்றை எட்ட உதவிசெய்யுமெனவும் உலகத் தமிழர் பேரவை நம்புகிறது.

புதிதாகத்தெரிவாகியஜனாதிபதிஅநுரகுமார திசநாயக்காவை உலகத் தமிழர் பேரவை வாழ்த்தியிருந்ததோடு , ஊழலை ஒழித்து தண்டனைவழங்கப்படாமையை முடிவுக்குக் கொண்டுவந்து இந்நிர்வாகம் நல்லாட்சியைப் பேணுமென நாம் நம்புகிறோம் எனவும் தெரிவித்திருந்தோம். பல தசாப்தங்களாக இலங்கையில் குற்றங்கள் ' அவை பொருளாதாரக்குற்றங்களாகவிருந்தாலென்ன அல்லது மோசமான மனித உரிமை மீறல்களாகவிருந்தாலென்ன ' எவரும் தண்டிக்கப்படாமல் இருப்பது தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இது எந்த வடிவத்தில் வந்தாலும் அவை முறியடிக்கப்படும்போது மட்டுமே உணமையில் 'தண்டிக்கப்படாமை' என்பது நிரந்தரமாக ஒழிக்கப்படும்.

ஐ.நா., சர்வதேசசமூகம், இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்கள் ஆகியவற்றுடன் நெருக்கமாகச்செயற்படுவதன் மூலம் மட்டுமே புதிய அரசாங்கம் தனது இலக்குகளை அடைய முடியும் என்பதோடு இச்சிரமமான பயணத்தின்போதுசர்வதேசசமூகத்தின்ஆதரவு கிடைக்கும் எனவும் உலகத் தமிழர் பேரவை நம்புகிறது. இதைச் சாத்தியமாக்குவதற்காக உலகத் தமிழர் பேரவை தனது பங்கை செவ்வனே ஆற்றும் எனவும் உறுதிசெய்கிறது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு ஆகியவற்றை முன்னிறுத்தியே போட்டி

## சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



தன்னாட்சி - தற்சார்பு - தன்னிறைவுஆகியமூன்றுஅடிப்படை விடயங்களை முன் வைத்தே தேர்தலில் போட்டியிடவுள்ளோம் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் இல்லத்தில் நேற்;று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

எங்களுடைய கூட்டணி இளைஞர் களையும், அனுபவமுள்ளவர் களையும் வேட்பாளராக நியமித் துள்ளோம். நான் முன்பே கூறியது போன்று தேர்தல் அரசியலிலிருந்து விலகியுள்ளேன்.

எமது வேட்பாளர்களின் சராசரி வயது 42 ஆகும். இளம் வேட்பாளர்கள் என இவர்களைச் சொல்லலாமா என சிலர் கேட்டார்கள். எங்களுடைய அரச அலுவலர்கள் 60 வயது வரை வேலை செய்கின்றனர். எனவே 60 வயதுக்கு உட்பட்டவர்களும் இளையோர் தான்.

2018ஆம்ஆண்டுதொடங்கியஎமதுகட்சியில்யாப்பில் தன்னாட்சி , தற்சார்பு , தன்னிறைவு ஆகிய மூன்று அடிப்படை காரணங்களை முன் வைத்துள்ளோம். அதன் அடிப்படையில் தான் எமது கட்சி தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. இம்முறை தேர்தலிலும் அதனை முன்னிறுத்தியே போட்டியிடுவோம்.

எங்களின் கொள்கைகளை நாங்கள் எமது கட்சியின் யாப்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அதன் அடிப்படையில் செயற்படுகிறோம்.

புதிய அரசாங்கம் புதிய அரசியல் யாப்பை உருவாக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் 300 வருடங்களுக்கு மேலாக வசித்து வருவதனால் எங்களுக்குச் சுயநிர்ணய உரிமை இருக்கிறது. எமது சுயநிர்ணய உரிமைகளை புதிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், அவர்களுடன் இணைந்து செயற்பட நாம் தயாராக உள்ளோம் என மேலும் தெரிவித்தார்.(05)

# தமிழ் மக்கள் கூட்டணி வேட்புமனுத் தாக்கல்

தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவடங்ககளை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில், யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் , வரதராஜன் பார்த்திபன், தவச்செல்வம் சிற்பரன், முருகானந்தன் யசிந்தன், கதிரேசன் சஜீதரன், குலேந்திரன் செல்ரன், அருள்பரன் உமாகரன், நாவலன் கோகிலவாணி, மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.(05)

# கொழும்பில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுப் பெண் கொலை

## சந்தேகநபர் கைது

கொழும்பு, வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெக்னிக்கல் சந்தி பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்; எனக் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் கடந்த 7 ஆம் திகதி அதிகாலை இடம்பெற்றுள்ளது.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# பெரியநீலாவணையில்

# சவப் பெட்டியை ஏந்தியவாறு மக்கள் மதுச்சாலைக்கு எதிராக போராட்டம்




கல்முனை பிரதேச செயலகத்தை உட்பட்ட பெரியநீலாவணையில்ஏற்கனவேஒருமதுபானசாலை உள்ளநிலையில்மீண்டும்புதிதாகஒருமதுபானசாலை திறந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் சவப் பெட்டியைத் தூக்கி நேற்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தஆர்ப்பாட்டம்பாடசாலைமாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும்பொதுமக்களுக்கும்இடையூறாக இருப்பதாகவும்போராட்டதாரர்கள்தெரிவித்ததுடன், பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோரை கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டகாரர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

ஏற்கனவே ஒரு மதுபானசாலை நீண்ட நாள்களாக உள்ள நிலையில் புதிதாக ஒரு மதுபானசாலை இங்கு அவசியம் இல்லை எனவும், சிறிய கிராமமான இக் கிராமத்திற்கு இரு மதுபானசாலைதேவையில்லைஎனவும்இதுஎங்கள் சமூகத்தைச்சீரழிக்கவே ஆரம்பித்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டதாரர்கள் தெரிவித்திருந்தனர்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உரிய உன்னிச்சை என்ற விலாசம் கொண்ட லேபல் பொறிக்கப்பட்ட மதுபானசாலையாக இது அம்பாறை மாவட்டத்தில் இயங்குவதாகவும் ஆர்ப்பாட்டதாரர்கள் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த பிரதேசத்திற்கு வருகை தந்த கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் மதுபான சாலை உரிமையாளரிடம் தற்காலிகமாக மூடுமாறும் தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறும் குறித்த மதுபான சாலையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மதுவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி



மேற்கொள்வதாகவும் உறுதி அளித்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.(05)

# முன்னாள் ராணுவ சிப்பாய் உட்பட மூவர் கசிப்பு உற்பத்திக் குற்றச்சாட்டில் கைது

கண்டி, திகன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி செய்ததாக கூறப்படும் முன்னாள் இராணுவ சிப்பாய் உட்பட மூவர் புதன்கிழமைகைதுசெய்யப்பட்டுள்ளனர் என மெனிக்ஹின்ன பொலிஸார் தெரிவித்தனர்.

மெனிக்ஹின்ன பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திசெய்வதற்குபயன்படுத்தப்படும் பொருள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைமெனிக்ஹின்னபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பதியாமல் லெபனானில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு பொதுமன்னிப்பு

லெபனானில் சட்டவிரோதமாக பணிபுரியும் இலங்கை தொழிலாளர்களுக்கு பொது மன்னிப்பினை வழங்குவதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகம்தீர்மானித்துள்ளது.

அதன்படி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாமல் லெபனானுக்கு வேலைக்காகச் சென்ற இலங்கையர்களுக்கு 2025 ஆம் ஆண்டுஜனவரிமாதம்8ஆம்திகதிவரை பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பதிவுசெய்யப்படாத புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்களை பதிவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(05)

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் நுவரெலியாவில் விபச்சார விடுதி

## 6 பேர் கைது

நுவரெலியாவில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்றிலிருந்து ஐந்து பெண்கள் உட்பட ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் மசாஜ்நிலையத்தின் உரிமையாளரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலன்னாவை, ஹசலக்க, கடவத்தை, வெலிமடை , ஹோமாகம மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 32 முதல் 47 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2024இல் வெளியிடப்பெற்றது